# 71

## படித்தல்

"கற்றல் என்ற பொருளில் படித்தல் என்ற சொல் பண்டைத் தமிழ் நூல்களில் ஓரிடத்தும் காண இயலாது என்றும்,

பட் என்ற வடமொழி வேர்ச்சொல்லின் அடியாகப் பிறந்ததே அச்சொல் என்றும்,

இலக்கணச் சிந்தனை என்ற நூலின் 101-ம் பக்கத்தில் திரு.எஸ். வையாபுரிபிள்ளை எழுதி உள்ளார்.

இதைத் தயை கூர்ந்து விளக்குக!"

என்று திருமதிக் குன்றம் திரு.அ. கணபதி அவர்கள் நமக்கு எழுதுகின்றார்கள்.

படித்தல் என்பது கற்றல் என்ற பொருளில் அமைந்திருப்பதாக வையாபுரியார் எண்ணினார். ஆயினும் அதன் நேர் பொருளை அவர் உணர்ந்திருந்தார் என்று எண்ண முடியவில்லை. அதன் மேல் அவர் 'பட்' என்றதன் அடியாகவே படித்தல் வந்தது என்றார். செய்தி முதற்கோணல் முற்றும் கோணலாக முடிந்தது.

படித்தல் என்பதன் பொருள் ஒன்றுகண்டு, அவ்வொன்றைக் கொள்ளல் என்பதேயாகும். எனவே படி என்றால், ஒன்றுகண்டு அவ்வொன்றைக் கொள் என்பது பொருள். நீ அந்நூலைப் படி என்றால், நீ அந்நூலிலிருந்து ஒன்றைக் கண்டு அவ்வொன்றைக் கொள் - மனத்துள் வை - என்பது அன்றோ பொருள்? இதில் வரும்படி வடசொல்லடியா? - அன்று. தூய தமிழ்ச் சொல்லே.

இதுவன்றி மிதித்தேறும்படி ஒன்று இருக்கிறது. அதுவும் ஒன்று கண்டு அவ்வொன்றை (அதாவது அதே போன்ற மற்றொன்றை) அடைதல் என்ற தொழிலே ஆகுபெயராயிற்று. அவ்வாறு வரும் படியும் வடசொல்லாகிய 'பட்' என்றதன் தோற்றமா? அன்று, அது தூய தமிழ்க் காரணப்பெயரே.

இனியும்,

படி என்பது உலகுக்குப் பெயராய் வரும், காரணம்? ஒருபால் ஒருவன் நடத்தலை - இருத்தலை மற்றொருவன் காணுகின்றான். அம் மற்றொருவன் அது கண்டு நடத்தலை, இருத்தலை மேற்கொள்ளு கின்றான். இதுவும் ஒன்று கண்டு அதைக் கொள்வது என்பதுதான். இத் தொழிலும் ஆகுபெயராயிற்று.

மேலும்,

படிவம் என்றதில் வரும் படியை நோக்குக. இதில் படி என்றதே வேர்ச்சொல். ஒன்றைப் பார்த்து வார்ப்படம் செய்த மற்றோர் உருவம் என்பது அதனால் பெறப்படும் பொருள் இதுவும் ஒன்றுகண்டு அவ்வொன்றைக் கொள்வதுதான்.

மற்றும்,

அப்படி இப்படி எனச் சுட்டை அடுத்து வருவனவும், எப்படி என வினாவை அடுத்து வருவனவும், வரும்ப!டி இருக்கும்படி என வினையை அடுத்து வருவனவும் ஆகிய எப் 'படி'யும் மேற்சொன்ன பொருளிலேயே அமைந்திருப்பதைக் கூர்ந்து நோக்குக!

கீழ்ப்படிதல் என்பதிலுள்ள படி, எப்படி? என்று கேட்பின்-அதுவும் அப்பொருளிலேயே அமைந்திருக்கின்றது. என்னை?

ஆணையிட்டானிடம் ஒன்று கண்டு (அவன் படிந்து போதலை விரும்புகின்றதை) அதை மேற்கொள்ளுவதே கீழ்ப்படிதல் ஆகும் என்க.

படி என்பவை அனைத்தும் ஒரே பொருள் உடையவை என்பது கண்டோம். காணவே படி என்ற சொல், தமிழ் தோன்றிய நாள் தொட்டே தமிழிலக்கியங்களில் உண்டு என்பதும் கண்டோம்.

வையாபுரியார் தம் வாழ்வையே பார்ப்பனர் மெச்சிச் சலுகை தரவேண்டும் என்ற பிச்சைக்காரத்தனத்துக்கு அடகு வைத்தவர்.

இந்தப் படி என்பதையே வடவர் ப்ரதி என்றார்கள்.

படி என்பது மட்டுமன்று. தமிழே வடமொழியினின்று வந்தது என்று கூறித் தமிழர்களால் கான்று உமிழப்பட்டவர் அவர்.

இலக்கணச் சிந்தனை - சிந்தனை ஒன்று வையா புரியார்க்குத் தனியாக உண்டோ? இல்லவே இல்லை.

ஆனால் வையாபுரியாரிடம் ஓராற்றல் அமைந்திருந்தது. அது என்ன தெரியுமா?

தமிழையும் தமிழரையும் தமிழகத்தையும் ஆரியர்களுக்குக் காட்டிக் கொடுத்துப் பிழைக்கும் ஒரு கீழ்மைச் செயலைப் பின்பற்றவும் அவர் ஆட்களைத் தோற்றுவித்தார். தெ.பொ. மீ.க்கள் முதலிய எத்தனை பேர்கள் இந்த நாட்டில் இருக் கின்றார்கள் - பாருங்கள்.

இது செயற்கரிய செயல்தானே!

படி என்பது தூய தமிழ்க் காரணப் பெயர் என்பதில் எட்டுணையும் ஐயுற வேண்டா.

**- குயில், 5.1.1960**

## 72

## அனுப்புதல்

இதில் உள்ள வேர்ச் சொல்லாகிய அனு என்பது வடமொழியா என்று புலவர் ப. முத்து கேட்கின்றார்.

அது வடசொல் அன்று, தூய தமிழ்ச் சொல்லே. விளக்கம் கீழ் வருமாறு:

ஒருவனிடம் ஒரு வேலைக்காரன் இருக்கிறான். மற்றொருவன் அவனுக்குச் செய்தி அனுப்பு என்று சொல்கிறான். அப்படி என்றால் என்ன பொருள்?

நீ கொண்டிருக்கும் வேலைக்காரனை அன்மையாக்கு. அதாவது அவனை இழந்துவிடு என்பதேயாகும்.

ஒருவனிடமுள்ள ஆயிரம் வெள்ளியை அனுப்புக என்று மற்றொருவன் சொன்னால் அதன் பொருள் என்ன?

நீ கொண்டிருக்கும் ஆயிரத்தை (என்னிடம் சேர்ப்பதன் மூலம்) வெறுமையாகிவிடு, ஆயிரத்தை உள்ளவனாய் இராதே: அல்லாத வனாய் விடு என்பதேயாகும்.

இவ்வாறு அனுப்புதல் என்பதன் பொருளை அறிந்தபின், அனு என்பதை தெரிந்து கொள்வது முடியும்.

அன்மை என்பதன் மை கெட்டு மேலும் அடைந்த திரிபே அனு. அனுவும் ப் என்ற எழுத்துப் பேறும் மற்றும் ப் என்ற இணைப்பும், உ என்ற சாரியையும் ஆக அனைத்துமோர் முதனிலையே அனுப்பு என்பது.

அனுப்பு என்ற முதனிலை 'தல்' என்ற தொழிற் பெயரின் இறுதிநிலை பெற்று அனுப்புதல் என்றாயிற்று. அனு-அன்மை, இன்மை - இல்லாமை.

எனவே அனுப்பு என்பதிலுள்ள அனு வட சொல்லன்று, தூய தமிழ்ச் சொல்லே என்பது பெற்றாம்.

## அனுபோகம்

இது அநுபவம் என்ற வடசொற்றிரிவு என்று கூறுவார் கூற்று அறியார் கூற்றே.

அனு அன்மையின் திரிபு. போகம், போதல் போ+கு+அம்; முதனிலை இறுதிநிலை இடையில் சாரியையும் என உணர்க.

அனுபோகம் அன்மை அதாவது ஒன்றை உடையவனாயிருந்த நிலை ஒழிந்தது.

அனுபோகம் - இல்லாமை தீர்ந்தது, ஒன்றின்மேல் தொடர்பு ஏற்பட்ட நிலை.

ஆதலின் இது தூய தமிழ்க் காரணப் பெயரே என்று கடைப் பிடிக்க.

## உத்தரவு, உத்தரம், உத்தாரம்

இவைகள் வடசொற்கள் அல்ல. தூயத் தமிழ்க் காரணப் பெயர்களே.

உம் என்பது ஆடுமாடு மேய்ப்பவர்களிடம் கேட்கின்றோம். உம் என்பதன் பொருள் என்ன? செல். அதாவது ஓரிடத்தினின்று மற்றோரிடம் செல், ஏறு, உயர்வு, கொள் என்பன. ஆடு மாடு மேய்ப்பவர்களிடம் கேட்கப்படுவதால் உம் என்பதைப் பற்றி இங்கு நாம் எடுத்துச் சொல்கிறோம் என்பதில்லை. பழங்காலத்தில் மேற்சொன்ன பொருளில் உம் என்பதைத்தான் மேற்கொண்டார்கள் சொற்கள் பெருகாத காலமாதலால்.

உம் என்ற பிறகு உந்து எனத் திரிந்தது. திரிந்தாலும் பொருள் மாறாது; மேற்சொல்லிய பொருள்கள்தான்.

உந்து - என்பதிலிருந்து உந்தி என்பது தோன்றிற்று. இது வந்து என்பதன் அடியாகப் பிறந்த பெயர்ச்சொல். இதில் இ.பெயர் இறுதிநிலை. பொருள் உந்தப்படுவதாகிய ஆள்கூட்டம்.

மற்றும் உந்தி என்பது உயிர்ப்பினை உந்தும் இடமாகிய கொப்பூழ் மற்றும் உந்தி உந்துதலால் பெற்ற இடமாகிய உயர்ச்சியையும் குறித்தது. பிறவும் உண்டு.

உந்து என்பதனடியாகப் பிறந்தது உந்தல். உந்துதல் தொழிற் பெயர்.

இனி.

உந்து, - உத்து என வலித்தல் பெற்றது என்ன பொருள் முன் சொன்னதே.

உத்து - உத்தரவு. உத்து x அரவு. அரவு தொழிற் பெயர் இறுதி நிலை பெற்று உத்தரவு ஆயிற்று.

அரவு தொழிற் பெயர் இறுதி நிலையாய் வருவதைத் தேற்றரவு முதலியவற்றிற் காண்க.

உத்தரவு என்ன பொருள்? ஒருவன் தன் ஆணையை மேற் செல்ல வைப்பது.

உத்தரம் - (உத்து+அர்+அம்) இதில் அரவு என்ற இறுதிநிலை அர் எனத் திரிந்து அம் முச்சாரியைப் பெற்றது.

உத்தாரம் (உத்து+ஆர்+அம்) இதில் அரவு என்ற இறுதிநிலை ஆர் எனத் திரிந்து அம்முச் சாரியை பெற்றது.

உத்தரவு, உத்தரம், உத்தாரம் இது சார்ந்த பிற பொருளிலும் வரும். ஆயினும் அப் பிற பொருள்களும் மேலே சொல்லிய பொருளுக்கு அப்பாற் செல்லமாட்டா.

எனவே, இவை தூய தமிழ்க் காரணப் பெயர்கள் ஆதல் அறிக. இன்னும் உத்து என்பதன் அடியாக உத்தித்தல், உத்துதல் என்றும் என்பனவும் வருவதுண்டு.

## உச்சரித்தல்

இதை வடசொல் என்று (வடவர்) பார்ப்பனர் சொல்லுகின்றார்கள். ஆதலால் இது பற்றியும் விளக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

உம் x உந்து x உத்து x உச்சு, உச்சு உத்து என்பதன் போல!

உச்சு x அரித்தல் = உச்சரித்தல் அரவு அரி எனத் திரிந்து தல் இறுதிநிலை பெற்றது.

உச்சரித்தல் என்பதன் பொருள் எழுத்தொலியை வெளியிற் செலுத்துதல். மேலே உம் – உந்து, உத்து, உச்சு பொருளில் மாற்றமில்லை.

எனவே உச்சரித்தல் தூய தமிழ்க்காரணப் பெயர் ஆதல் அறிக.

**- *குயில்*, 12.1.1960**

## 73

### கண்ணியம்

இது கண்யம் என்ற வடசொல்லின் சிதைவென்பர் வடசொற் பற்றாளர். வடசொல் என்ற எண்ணத்தால் எடுத்தாள்வாரும் உளர்.

இஃது தூய தமிழ்க் காரணப் பெயர் ஆதலை அவர் அறியார். கண்ணல், கண்ணம் - கருதுதல், குறித்தல், மகித்தல் என்றும் பொருளுடையவை.

கண்ணம் என்பது கண்ணியம் ஆனது. ஓவம் ஓவியம் ஆனதுபோல என்க.

**"கொடிநிலை வள்ளி கந்தழி என்ற,**
**வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்,**
**கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"**

என்ற தொல்காப்பிய நூற்பாவிலும் காண்க.

கண்ணியம் - கருதத் தக்கது, மேன்மை ஆதலின் கண்ணியம் தூய தமிழ்க் காரணப் பெயர் என்று கடைப்பிடிக்க.

### கவனம்

இது வடசொல் அன்று; கவற்சி - விருப்பம், கவல், விருப்பம் கெடுதலினால் ஆகும் வருத்தம்.

அதனடியாகப் பிறந்ததே கவனம்; கவல் கவன் எனத் திரிந்து அம்முச்சாரியை பெற்றதென்க.

கவனம் - கருத்து, விருப்பம், கண்காணிப்பு.

எனவே கவனம் தூய தமிழ்க் காரணப் பெயர் ஆதல் உணர்க.

**- *குயில்*, 26.1.1960**

# 74

## கண்டம்

இது வடசொல் என்கின்றனர் வடமொழியைத் தாய் மொழியாய்க் கொண்டவர்கள். வடமொழிப் பற்றுள்ளவர்களும் அப்படி இடைக்காலப் புலவர்களும் இதை வடசொல்லென்றே வைத்துச் செய்யுள் செய்தார்கள். இனிக் கண்டம் என்பதைக் கண்டேம் என்று உச்சரிப்பது தான் நாகரிகம் என்று எண்ணி அவ்வாறு சொல்லுகின்றார்கள் சிலர் இந்தத் திக்கில்லாத தமிழகத்தில்.

கண் என்பதின் பொருள் என்ன? இதை அணுகி ஆராய்தல் வேண்டும். கண் என்பதன் பொருள் இடம் என்று சிலர் பொருள் சொல்லிவிடுகிறார்கள். அவ்வாறு சொல்லிவிட்டால் மட்டும் போதாது. கண் பொதுவிடத்தை நீக்கிய சிறப்பிடம் என்று பொருள் காண வேண்டும்.

இது விழியைக் குறிக்கும்போது உடம்பாகிய பொது விடத்தை நீக்கிச் சிறப்பிடமாகிய விழியைக் குறிப்பது காண்க.

கண் என்பது பொது நீக்கிச் சிறப்பைக் குறிப்பதால், அது பொது விடத்தை விடக் கவர்ச்சியுள்ளதாக – சிறப்பிடமாகக் கண்ணை வுணர்த் திற்று. கண் எங்கு வந்தாலும் அது கவர்ச்சிப் பொருளைக் குறிப்பதாகும்.

கண் என்பதன் அடியாகக் கண, கண, கணீர், கண் என்று ஒலித்தது என்பன வரும். பொதுவிடமாகிய ஒலியினத்தை நீக்கிச் சிறப்பிடமாகிய (ஒலியில்) கண கண என்பன முதலியவைகளைக் குறித்தது காண்க.

கண் என்பதன் அடியாகக் கணம் வரும் பொதுவாகிய நேரத்தை நீக்கிக் கைந்நொடிப்பாதைக் குறித்தது காண்க. கணிதம், கண்ணல் அனைத்தும் அவ்வாறே. கண் என்பது கண்டு எனத் திரிந்துவரும். வேர்ச்சொல் கண் என்பதுதான். கண்டு என்றால் என்ன? தளை நூலாகிய பொது இடத்தை நீக்கி நாணற் குழலின்மேல் சுற்றப்படும் சிறப்பிடத்தைக் குறிப்பது காண்க. கண்டு-நூல் சுற்றப் பெற்ற நாணற் குழை; இதைத் தார் என்றும் சொல்லுவர்.

இனி, கண்டு உடலாகிய பொதுவிடத்தை நீக்கிச் சிறப்பிடமாகிய கழுத்தைக் குறித்தது காண்க.

கண்டு - கழுத்து; "நஞ்சுண்டு கறுத்த கண்டி" (சிலம்பு: வேட்டுவ வரி) என்பதில் கண்டு என்பதை அதாவது கழுத்துடையவள் கண்டி; இதில் இ பெண்பால் இறுதிநிலை.

இனி, இக் கண்டு என்பது கண்டம் என அம் சாரியை பெற்று வரும். மன்று - மன்றம், கூற்று - கூற்றம் - வேடு, வேட்டம் என்பவற்றிற் போல.

இனியும் கண்டம் துணிக்கைக்குப் பெயர். மரத்துணிக் கையில் வைத்து நோக்குக. பொதுவிடமாகிய மரத்தை நீக்கிச் சிறப்பிடமாகிய துண்டத்தை, துணிக்கையை கண்டத்தைக் குறிப்பது காண்க.

கண்டம் என்பதை அடியாகக் கொண்டு, கண்டித்தான் முதலிய வினைகள் தோன்றும். அங்கும் அப் பொருளே காண்க.

எனவே,

கண்டம், கழுத்து, துண்டம், நூற்கண்டு, பெருநிலம் பரப்பு முதலியவற்றைக் குறிக்கையில் அது தூய தமிழ்க் காரணப் பெயர் ஆதல் மறுக்கக் கூடியதன்று.

கண்டம்: நம் செந்தமிழ்ச் செல்வம்.

**- குயில், 2.2.1960**

# 75

## கொஞ்சம்

இது கிஞ்சித் என்ற வடசொற் சிதைவென்று வாய் புளித்ததோ - மாங்காய் புளித்ததோ என ஆராயாது கூறுவோர் இருக்கின்றார் போலும்.

கொஞ்சுதல் - என்பது நிரம்பாப் பேச்சு; சிறிது பேசுதல் இதன் முதனிலை கொஞ்சு; இது சிறிது, குறைந்த அளவு என்ற பொருளுடையதே.

இக் கொஞ்சு என்பதுதான் அம்முப் பெற்றுக் கொஞ்சம் ஆயிற்று. மிஞ்சு, மிஞ்சல், மிச்சம் என்றதிற் போல.

எனவே கொஞ்சம் தூய தமிழ்க் காரணப் பெயராதல் பெறப்படும்.

### பாடம்

இது போன்ற ஒலி வடவரிடமும் இருக்கலாம். வடவர் பாடத்திற்கும், தமிழ்ப் பாடத்திற்கும் தொடர்பில்லை. தானம் என்பது போல.

பாடு என்றால் பெருமை; அப் பாடு என்ற நெடிற்றொடர்க் குற்றுகர முதனிலை, அம் என்ற இறுதிநிலை பெற்றுப் பாடம் ஆயிற்று. பாடம் பெருமைப்படுவது. ஆசிரியர் சொல்வதை மனத்தில் கொள்வது.

பாடம்: பெருமை, இது பிறவற்றிற்கும் வரும்.

எனவே பாடம் தூய தமிழ்க் காரணப் பெயர்!

### படம்

இதையும் வடசொல் என்பர்; எதையும் வடசொல் என்று கூறி மகிழும் ஒரு கூட்டத்தார்.

படு என்ற முதனிலைக்கு ஓவியன் மனத்துள்ளது ஏட்டில் படுவது என்ற பொருள் ஆவது காண்க.

படு + அம் = படம் "முற்றும் அற்று ஒரோ வழி" என்பதால் இவ்வாறு புணர்ந்தது.

படம், படல் - இது தொழிற் பெயர், தொழிலாகு பெயராய்ப் படமாகிய பொருளை உணர்த்தியது.

எனவே படம் தூய தமிழ்க் காரணப் பெயர்.

## இலேசு

லேசு: தமிழினின்று வந்ததல்லவாம் - வேறு எதிலிருந்து குதித்து விட்டதோ தெரியவில்லை. இலது என்ற தமிழ்ச் சொல்லாகிய குறிப்பு வினைப் பெயர் தெலுங்கரால் லேது என்று வழங்கப்படுதல் காணுகின்றோம்.

இலது - இல்லாதது, சிறியது.

இது போலவே அரிது - அருமையாக வழங்குவது; இல்லாதது என்று வழங்குவது காண்க.

இந்த இலது தெலுங்கில் லேது என்றும், வடமொழியில் லேசு என்றும் வழங்கும்.

எனவே இலேசு, இலது என்பதன் திரிபுதானே. இலேசு தமிழ்க் காரணப் பெயர் என்க.

**- குயில், 16.2.1960**

CENTER FOR BHARATHIDASAN LIBRARY BHARATHIDASAN UNIVERSITY

## 76

### கன்னி

கன்யா என்பது வடமொழியில் இளம் பெண்ணுக்கு வழங்கு கின்றது. அதே வட சொற் சிதைவே கன்னி என்பதும் என வட மொழி யாளர் சொல்லுவார்கள். கன்யாவுக்கும் கன்னி என்பதற்கும் எந்தத் தொடர்பும் இருக்க முடியாது. கன்யா என்பது தமிழில் கன்னியை, கன்னிகை என்றெல்லாம் வந்திருக்கவேண்டும். ஆங்கு அது வடசொல் எனின் ஒக்கும்.

கன்னி என்பது இளமை குறித்துத் தமிழிலக்கியங்களில் பெரிதும் பயின்று வந்துள்ளது.

கன்றுக்குட்டி என்பதன் வேர்ச்சொல்லையும் நோக்குக. நோக்கவே கன்றுதல் கன்னுதல் என்றால் இளமை, வளர்ச்சியின்மை, அழிவு பெறுதல் என்று பொருள்படும்.

கன்னுதலின் வேர்ச் சொல்லாகிய - முதனிலையாகிய கன்னு, இகரப் பெயர் இறுதிநிலை பெற்றதே கன்னி என உணர்தல் வேண்டும்.

கன்னு என்ற முதனிலை இகரப் பெண்பால் இறுதி பெற்று இளம் பெண்ணுக்கு ஆகும்.

கன்னு என்பது அஃறிணை ஒன்றன் பால் இறுதி பெற்று இளமை உடையது என அஃறிணை ஒன்றன் பெயராகும். கன்னி என்பது தென்பால் உள்ள ஓர் ஆற்றைக் குறித்ததும் காண்க.

கன்னி என்பது தென்பால், ஆற்றுக்கு, முளைக்கு ஆகும்போது அழிந்தது, அழிவு பெற்றது என்ற பொருளில் அமைந்ததாகும்.

இனிக் கன்னியா குமரி என்று வழங்கும் ஒரு தொடரைக் காட்டி அதில் கன்னியா என நிற்பது வடசொல் என்பாரும் உளர். அஃது அவ்வாறன்று. கன்னி குமரி என்பதன் இடை ஆகாரம் சாரியை. ஆடு தொடாஇலை என்பதில் உள்ள ஆடு ஆடா என ஆகாரச் சாரியை

பெற்றது போல. இவ்வாறு ஆகாரம் சாரியையாக வருவது தமிழில் பெருவழக்கே.

எனவே

கன்னி தூய தமிழ்க் காரணப் பெயர் என உணர்க.

## குமரி

குமைதல் எனில், அழிதல், உரி எனல் உரு உடையது. உரு என்ற முற்றுகரம் இகரத்தை முற்றும் அற்று என்ற இலக்கணச் சட்டத்தால் உரி எனப் புணர்ந்தது.

குமை + உரி = குமையுரி. இது குமரி என வேறுபாடுற்றது.

எனவே குமரி என்பதன் பொருள் குமரி முனைக்கு ஆகும்போது அழிவை அடைந்தது என்ற பொருளை அடையும்.

குமரி என்பது சிறுமை, நிரம்பாமையுடைய பெண்ணுக்கு ஆவதும் காண்க.

எனவே,

குமரி தூய தமிழ்க் காரணப் பெயர் என்க.

- குயில், 23.2.1960

## 77

## கொட்டாரம்

இது வடசொற் சிதைவென்று நம் தோழரிடம் பார்ப்பனர் ஒருவர் கூறினாராம். அவர் தம் பெயரை வெளிப்படுத்த விரும்பவில்லை. அது மட்டுமல்ல, பார்ப்பனர் பேரையும் வெளிப்படுத்த அவர் விரும்ப வில்லை.

நம் தோழருக்கு நாம் சொல்லிக்கொள்ள விரும்புவது. இப்படிக் கலகக்காரப் பசங்கள் இல்லாததும் பொல்லாததும் சொல்லிவிட்டு மகிழ்ச்சியடைந்து கொள்வதுண்டு. அப்படி நடந்துகொண்டால் இவர் நம்மை உதைப்பாரே என்று அவர்கள் நினைக்கும்படி நம்மைக் காட்டி வைக்க வேண்டும்.

கொட்டரவு என்றால் கொட்டுதல், குவித்தல் சேர்த்தல் என்பது பொருள். கொட்டரவு என்பதில் அரவு தொழிற் பெயர் இறுதிநிலை, தேற்றரவு என்பதிற் போல! அந்த அரவு என்ற இறுதிநிலை திரிபு பெற்றுக் கொட்டாரம் ஆயிற்று. கொட்டாரம், கொட்டுதல் என்பதே. இது தொழிலாகு பெயராய் நெல் முதலிய கொட்டிவைக்கும் ஒரு பெரும் பேழையை உணர்த்தும் அல்லது கொட்டிவைக்கும் தனியிடத்தைக் குறிக்கும். எனவே கொட்டாரம் தூய தமிழ்க் காரணப் பெயர் என்று உணர்க.

### பந்து

என்பது பந்தம் என்ற சொல்லினின்று வந்ததென்று சடகோப ராமாநுசர் சாற்றி மகிழ்ந்தார்.

பை என்பது தமிழில் பொட்டணத்துக்குப் பெயர். அந்தப் "பை" என்பதனடியாகப் பிறந்த பெயரே பந்து என்பது.

பைந்து என்றே முதலில் வழங்கிற்று. பின்னர் போலியாகப் பந்து ஆயிற்று.

தாரகம் புதைத்த தண்மலர்ப் "பைந்து" (பெருமக காண்டம்)

நொம்பைந்து புடைத்து ஒல்கு நூபுரஞ்சேர் மெல்லடியார் (தே.ஞா)

பொட்டணம் போல் கட்டிப் பெண்கள் விளையாடுவதினின்று தோன்றியது பைந்து, பந்து என்ற பொருளே உடையது.

ஆதலின் பந்து, வந்தவர் மொழியன்று; செந்தமிழ்ச் செல்வமே என்க.

**- குயில், 12.4.1960**

## 78

### சிப்பம்

இதைச் சிப்பம் என்ற வடசொற் சிதைவு என்பர் ஏமாற்றுகின்றவர்.

இது சிம்பு என்பதன் அடியாகப் பிறந்த தமிழ்ச் சொல்.

சிம்பு - மூங்கில் முதலியவற்றின் சிறு பிளவு.

சிம்புதல் என்றால் இழுத்தல் என்ற பொருளில் வழங்குகிறது.

பிரம்பு + காடு = பிரப்பங்காடு

இரும்பு + ஆணி = இருப்பாணி

கரும்பு + சாறு = கருப்பஞ்சாறு

மருந்து + பை = மருத்துப் பை.

என்பவற்றில் மெல்லெழுத்து வல்லெழுத்தானது போல சிம்பு என்பதும் சிப்பு ஆயி அம்மீறு பெற்று சிப்பம் ஆனது.

சிப்பம் - கட்டு; சிம்பு வைத்துக் கட்டுவது என்க.

எனவே,

சிப்பம் தூய தமிழ்க் காரணப் பெயர். வந்தவர் மொழியன்று.

### தீந்தா

இது இறகு தொட்டு எழுதுவதற்கான வண்ணநீர், இதை இக்காலத்தார் ஆங்கிலத்தில் இங்க் என்பர். தீந்தா என்னும் இப்பெயர் வடசொல் என்று எண்ணுவாரும் உளர். அன்று, இது தீண்டு என்பதன் திரிபாகத் தீந்தா ஆனது.

தீண்டு - இறகால் தீண்டப்படுவது; எனவே தீந்தா தமிழ்க் காரணப் பெயர்.

**- குயில், 31.5.1960**

# 79

## கன்னம்

கன்னம் - தட்டு, தட்டுப் போன்ற கன்ன உறுப்பு. கண், மூக்கு, காது, வாய் ஆகியவற்றை ஒட்டி இடப்படும் கோட்டுக்கு நடுப்பகுதி தட்டுப் போல் அமைந்திருப்பதை நோக்குக. கன்னம் என்ற உறுப்பு தட்டுப் போல் அமைந்திருந்ததால் அவ்வுறுப்பை கன்னம் என்றனர் பண்டைத் தமிழர்.

கன்னம் தராசுத் தட்டுக்குப் பெயராகும். கன்னப் பொறி என்பது காதுக்கும் பெயர். அது கன்னத்தின் அருகு அமைந்திருப்பதால் அப் பெயர் பெற்றது.

கன்னம் என்பது கர்னம் என்ற வட சொல்லின் சிதைவென்று கூறுவோர் அறியாதாரும், திருடரும் ஆவார் என்க.

காதை ஒட்டி இது (கன்னம்) அமைந்திருக்கும் காரணத்தால், காதையும் கன்னம் என்று கூறுவரன்றோ? இவ்வாறு கூறுவதும் பிழை அன்று. காதின் பெயராகக் கன்னம் என்று கூறும் போதும், கன்னம் வட சொல் அன்று; அதாவது கர்னத்தின் சிதைவாகிய சொல்லன்று.

எனவே கன்னம் என்ற தூய தமிழ்ச் சொல்லானது, கன்ன உறுப்பைக் குறிக்கும்போதும், கன்னம் இடுதலைக் குறிக்கும்போதும், தராசுத் தட்டைக் குறிக்கும்போதும், கன்னக்கோலைக் குறிக்கும் போதும், யானைச் செவியைக் குறிக்கும்போதும் அருகைக் குறிக்கும்போதும், நரம்பைக் குறிக்கும்போதும் வடசொற் சிதைவன்று; தூய தமிழ் காரணப் பெயரே என்று கடைபிடிக்க, கதுப்பு என்பதும் கன்னத்தின் பெயர் என அறிக. கன்னம் செந்தமிழ்ச் செல்வமே!

## பாது

பாதுகாத்தல் என்ற தொடரில் உள்ள, பாது என்பதைத் தமிழ் அல்லாது வேறு சொல் என்று, தமிழ் மாணவரிற் சிலர் எண்ணுவதாகத் தெரிகிறது.

பகுத்தல், பகுதல், பாதல், பார்த்தல், பாத்தீடு, என்பவை நோக்குக. பாதல் என்றதில் தல் என்ற இறுதி நிலை இல்லை. முதனிலை மட்டும் நின்றது. பாது என்ற சொல்லின் பொருள் பங்கு, பகுதி என்பன. அது நாளடைவில் அது தன்னை அடுத்து வரும் வினையைச் சிறப்புறுத்துவதோர் சொல்லாய் வழங்குகின்றது. பாதுகாத்தல் என்றால், நன்கு காத்தல் என்பது பொருள் என்க.

பாது தூய தமிழ்க் காரணப் பெயர். வந்தவர் மொழியன்று.

**- குயில், 7.6.1960**

# 80

## சக்கரம்

இது வடசொல் என்பார் உரை பொருந்துவதன்று. அவ்வாறு செப்புவோர் தமிழ்ச் சொற்கள் அனைத்தும் வடமொழியினின்றே வந்தவை என்று கூறும் முந்தா நாளைய விருந்தினர்.

செம்மை என்பதன் அடியாகப் பிறந்த செக்கு என்ற முதனிலையும், அரவு என்ற தன் திரியாகிய அரம் என்ற இறுதி நிலையும் சேர்ந்தது செக்கரம் என அறிக. செக்கரம் என்பது சக்கரம் ஆகியது எப்படி எனின், கூறுவோம்.

தமிழில் முதல் நாளில் மொழி முதலில் சகரம் வராது. பிற்காலத்தில்தான் சகரம் மொழிக்கு முதலில் வருவதாயிற்று. அவ்வாறு வரத்தலைப்பட்டபோதுதான் செக்கரம் சக்கரம் ஆயிற்று.

செம்மையின் அடியாகச் செக்கு வருமா எனின், செம்மையின் அடியாக - செவப்பு, சிவப்பு, சிவம், செவ்வனம், செக்கார், செம்பு முதலிய சொற்கள் வந்தது அறிக. எனவே செக்கு என்பதும் செம்மையின் அடியாகப் பிறந்த சொல்லே என்க.

இனி,

செம்மை என்ற சொற்பொருள்: செந்நிறம், நடுவு நிலை, வட்டம்.

சக்கரம் வட்டமாக இருத்தல் நோக்குக. எனவே சக்கரம் - வந்தவர் மொழியன்று; செந்தமிழ்ச் செல்வமே யாகும்.

- *குயில்*, **14.6.1960**

## 81

## அகராதி

அகரம் x ஆதி = அகரவாதி என வேண்டிய இத்தொடர் அகரத் தொகுத்தல் பெற்று அகராதி என ஆயிற்று.

இதில் ஆதி என்பது தமிழ் அன்று என்பார் உரை சரி அன்று. ஆதல் என்ற தொழிற் பெயர் போன்றதே ஆதி, ஆ என்ற வினை முதனிலையுடன் தி என்ற தொழிற் பெயர் சேர்ந்தது. ஆதி, ஆ என்ற வினை முதனிலையோடு தல் என்ற தொழில் இறுதி நிலை சேர்ந்தது ஆதல். எனவே இரண்டும் தொழிற் பெயர்களே.

ஆதல் அல்லது ஆதி என்றால் முதலிடம் முதற்காலம் என்பதுதான் பொருள்.

அகராதி என்றால் அகரத்தை முதலிடத்திற் கொண்ட நூல் என்பதுதான் பொருள்.

இதை அன்மொழித் தொகை என்பர் இலக்கணத்தார்.

சிலர் அகராதி என்பதற்கு அகர வரிசை என்று எழுதி வருகின்றனர். அவர்கள் அகராதி என்ற சொல், வடசொல் என்று பிழையாக எண்ணினார்கள். ஆதலால், அகரத்தை ஆதியாக, முதலாகக் கொண்ட நூல் என்றால் ஆகாரம் முதலியவற்றை அண்டையில் வரிசையாகக் கொண்டது என்ற கருத்தும் தோன்றும். அகர வரிசை என்பது அவ்வகையில் பொருள் சிறவாமையை அவர்கள் நோக்கினாரில்லை.

அகரம் என்பதில் அ என்ற எழுத்து கரம் என்ற சாரியை பெற்றது. அதுவும் தூய தமிழே.

எனவே,

அகராதி வந்தவர் மொழியன்று, செந்தமிழ்ச் செல்வமே.

- **குயில், 12.7.1960**

## 82

### கண்டை

அடிக்கும் மணியின் பெயர். டண் என்பது ஒலிக்குறிப்பு. இந்த டண் என்பது கண்ட் என எழுத்துநிலை மாறிற்று. ஐ என்ற பெயர் இறுதிநிலை பெற்றுக் கண்டை என்றாயிற்று. எனவே கண்டை தூய தமிழ்க் காரணப் பெயர்.

இது கண்டா மணி என்றும் வழங்கும்.

இது கண்டா என்ற வடசொல்லின் சிதைவென்று சடகோப இராமானுசர் கூறுவது பொருந்தாது.

### கிண்கிணி

காலணியின் பெயர். கிண் கிண் என ஒலிப்பது, இது வடசொல் என்ற சடகோபர் கூற்றுச் சரியானதன்று.

எனவே கிண்கிணி வந்தவர் மொழி அன்று செந்தமிழ்ச் செல்வமே.

### நுகம்

இது எருது பூட்டப்படுவதற்கான நுகத்தடி.

இதைச் சடகோபர், யுகம் என்ற வடசொற் சிதைவென்றார். மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோட்டவாறு.

நுகத்தல் என்பது ஒன்றின் முரட்டுத் தனத்தினின்று இளக்கிக் கொணர்வது என்ற பொருளுடையது. நுகு முதநிலை, அம் தொழில் இறுதிநிலை. தொழிலாகு பெயராய் நுகத்தடியை உணர்த்தியது.

எனவே நுகம் தூய தமிழ்க் காரணப் பெயர் என்க.

## வண்ணம்

மேலும் ஆச்சாரி, வண்ணம் என்பது வர்ணம் என்ற வடசொல்லின் சிதைவு என்று மாணவர்களிடம் போடுகின்றார்.

வண்ணம் என்பது ஒரு பொருளின் மிகுதியும் சிறப்பும் ஆகும். இந்த வகையால் நிறம் என்றும், ஓவம் என்றும் பொருள் தருவதாயிற்று.

வண்ணக்கன் சாத்தனார், வண்ணான் முதலியவற்றில் ஓவியம் சிறப்பு என்ற பொருள்தந்து நிற்பது உணரப்படும்.

வர்ணம் என்ற சொல்லும் வடசொல் அன்று. வண்ணம் என்ற தமிழ்ச் சொல்லை ஆரியர் பிழைபட உச்சரித்ததேயாகும். எனவே வண்ணம் தூய தமிழ்க் காரணப் பெயர்.

## மண்டலம்

இதை மண் - தலம் என்று ஷியார் பிரித்தது சரி. அதன் இறுதியாகிய தலம் என்பது ஸ்தலம் என்ற வட சொற் சிதைவு என்று கூறியது அடாதது.

இடம் என்று பொருள் படும் தலை என்பது தொடர் மொழியின் இறுதிச் சொல்லாய் . நம்போது தலம் எனத் திரிந்து வரும். அவ்வாறு வந்ததே மண்டலம் என்பது.

எனவே தலம் தூய தமிழ்க் காரணச் சொல்லேயாகும்.

**குயில், 16.8.1960**

# 83

## படித்தல்

அன்புகூர்ந்து விளக்குக என்று அ. கணபதி (திருமதிக்குன்றம்) நமக்கு எழுதியுள்ளார். கற்றல் என்ற பொருளில் அடி என்ற சொல் பண்டைத் தமிழ் நூற்களில் காணவியலாது என்றும், பட் என்ற வடமொழித் தாதுவின் அடியாகப் பிறந்ததே இச் சொல் என்றும் (இலக்கணச் சிந்தனைகள்) என்ற நூலின் 101ஆம் பக்கத்தில் எழுதி யுள்ளார் திரு.எஸ். வையாபுரி பிள்ளையவர்கள்.

கற்றல் என்ற பொருளில் படி என்ற சொல் பண்டைத் தமிழ் நூற்களில் காணவியலாது என்றும், பட் என்ற வடமொழித் தாதுவின் அடியாகப் பிறந்ததே இச் சொல் என்றும் (இலக்கணச் சிந்தனைகள்) என்ற நூலின் 101ஆம் பக்கத்தில் எழுதியுள்ளார். திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள். அன்பு சார்ந்து விளக்குக என்று அ. கணபதி திருமதிக்குன்றம், நமக்கு எழுதியுள்ளார்.

பண்டைத் தமிழ் நூற்களில் படித்தல் என்ற சொல் காணப்படா விடில் அதன் பிற்காலத்தில் படித்தல் என்ற சொல் ஏற்பட்டிராதா? பண்டைக்காலம் போனால் அதன் அண்டைக் காலத்தில், பட் என்ற வடசொல் அடியை வைத்துத்தான் தமிழறிஞர்கள் ஆக்கியிருப் பார்கள் என்பதற்கு வையாபுரிகள் என்ன ஆதாரம் காட்டுகிறார். பட் என்ற வேர்ச்சொல் இங்கு வழக்கத்தில் இல்லாததும், தமிழறிஞர்களால் அறியப்படாததும் ஆகுமன்றோ! கற்றல் என்ற வடசொல் வேரையா தேடிக்கொண்டு போயிருப்பார்கள். அந்நாளிலும் தமிழைக் காட்டிக் கொடுக்கும் வையாபுரிகள் இருந்தார்கள் என்று சொல்லவே முடியாது. புதிதாக வந்து நுழைந்த வடசொற்களைக் கையாண்ட தமிழர்கள், அந்நாளில் இருந்தார்கள் என்பதை மறுக்கவில்லை. கற்றல் இருக்கும் போது அதற்குப் போட்டியாக வடசொற் குறுங் காட்டில் புகுந்து பட், என்பதை தேடிப் பிடித்தவர்கள் அந்த நாளில் இருந்தால் அந்த நாளிலேயே தமிழ் அடியோடு மறைந்திருக்குமே?

இனி,

படி என்பதை ஆராய்வோம். படி என்றால் ஆழ்தல் என்பது பொருளன்றோ? நீரிற் படிந்தான், குளத்திற் படிந்தான் என்ற சொல் வழக்குப் பண்டைத் தமிழில் உண்டு அன்றோ? இதனால் படி என்ற சொல் அப்பொருளில் வழங்கியதென்பது பெருவழக்கேயன்றோ? இதனடியாகப் பண்டை காலத்தின் அண்டைக் காலத்தவர், படி என்பதன் அடியாகப் படித்தல் என்பதை வழக்கத்திற் கொண்டுவர வையாபுரிகளையா உத்தரவு கேட்க வேண்டும்? பண்டைக் காலத்தில் படிதல் இருந்திருக்கவும் இல்லை என்று சொல்லுவோன் ஆராய்ச்சி யுள்ளவன் என்றும் எப்படிச் சொல்ல முடியும்?

படிதலும், படித்தலும் ஒன்றேயாகும் என்பதையும் நோக்குக.

இனி,

படித்தல், படிதல் கற்றலாகுமா என்று கேட்கலாம். இவ்வாறு கேட்பவர் கற்றல் என்பதன் பொருளையும் நோக்கவேண்டும். கற்றலின் முதனிலை கல். கல் என்றால் கல்லுதல், எதைக் கல்லுதல்? அறிவு என்னும் கல்லை சிரத்தையால் கல்லுதல்! அது போல் படி, அறிவு, என்னும் வெள்ளத்தில் உள்ளம் படிதல் என்று இங்கு ஆவதும் காண்க.

படிதல் பண்டைத் தமிழ் இலக்கியத்தில் இருக்கையிலும், படித்தலும் இருக்கிறதா என்று கேட்பவன் தமிழறிஞனாயிருக்க முடியாது;

ஆரியர் அடிவருடியாகத்தான் இருக்கமுடியும். வையாபுரி எப்படி? தமிழே வட மொழியினின்று வந்தது என்ற மானமிலி அன்றோ? அறிவிலி அன்றோ!

படிதல் என்பதில் படி என்ற முதனிலையும் தல் என்ற தொழிலிறுதி நிலையும் அடங்கின. படித்தல் என்பதில் படி என்பதும், த் என்பதும், தல் என்பதும் அடங்கின. த் என்பது எழுத்துப் பேறு. இடைவரும் எழுத்து என்பது தமிழிலக்கணம், படிதல் என்பதற்கும் படித்தல் என்பதற்கும் வேறுபாடு இருப்பதாக எண்ணற்க.

**- குயில், 13.9.1960**

பண்டைய இலக்கியத்தில் காணப்படாமல் இடைக்காலத்தில் அல்லது இன்று காணப்படுகின்ற சொற்கள் அனைத்தும் வட சொற்களா? முட்டி என்ற சொல், பண்டை தமிழிலக்கியத்தில் காணப் படவில்லை. அதனால் அது முஷ்டி என்ற வடசொல்லின் சிதைவு என்று கூறிவிடுவதா? வேட்டி என்பது முன் இல்லை, அதனால் அது வேஷ்டி என்பதன் சிதைவு என்று சொல்லிவிடுவதா? முண்டு பழந் தமிழில் காணப்படுகின்றது. அது கொண்டு முட்டி பிற்காலத்தில் தோன்றியது எனில் வையாபுரிகள் மன மெரிந்து போவாரா?

வெட்டல் என்பது பண்டைத்தமிழ் இலக்கியத்தில் இருக்கிறது. அதனின்று வேட்டி தோன்றுவதற்கு வையாபுரியை உத்தரவு கேட்க வேண்டுமா? இன்று வரை இருந்துவரும் தமிழ்ப்புலவர் இடையில் ஒழிந்தா போய்விட்டார்கள். தமிழறிவின் வாழையடி வாழைகட்கு வெட்டுவதினின்று வேட்டியை ஆக்கும் ஆற்றல் இல்லை எனல், மொழிவளர்க்கும் ஒரு கால இயற்கையும் செத்துப் போய் விட்டதா? வேட்டியை வேஷ்டி என்று கூறி, அதன் பிறகு வேஷ்டியின் சிதைவுதான் வேட்டி என்பது என்றும் வடவர் சார்பில் இன்றும் கூறப்படுவதுண்டு.

இப்படியெல்லாம் தாய்மொழிக்கு மாசுபடச் செய்து விட்டனர் வையாபுரியும், இன்று அவர் வழி பற்றி ஒழுகும் சில பாவிகளும், இதில் நமக்கு வியப்பு இல்லை. அந்தப் பாவிகளைப் பாராட்டிப் பெருமைப்படுத்திவிடவும் தமிழ் ஏடுகள், நாளிதழ்கள் இருக்கின்றன என்பதுதான் நமக்கு வியப்பை உண்டாக்குகின்றது. எனவே படித்தல் என்பதன் அடியாகிய படி என்பது பட் என்ற வேர்ச்சொல் அன்று. செந்தமிழ்ச் செல்வமே என்று கடைப்பிடிக்க.

**- குயில், 20.9.1960**

## 84

### தானம் பாடினான்

என்பதில் உள்ள தானம் வடசொல் என்றார் ஒரு புலி. தானம் என்பது வடசொல்லில்தான் மிகுதியாகக் காணப்படுகின்றது. தானம் பாடினான் என்பதில் உள்ள தானம் என்ன பொருளில் அமைந்திருக் கிறதோ, அதே பொருளில் பண்டைத் தமிழில் நாம் எங்கும் ஒரு சிறிதும் கண்டிலோம் என்றார் அந்தப் புலி. ஆ ஒ என்று வெற்றிசை பாடும் இசைப்புலவர்கள் தானம், தனம், ந்தனம் என்று இசைப்பது எவரும் அறிந்தது. தானம் என்று சொல்லிப் பாடுவதைத் தானம் பாடுவது என்றே கூறினார்கள். தமிழிசைப் புலவர்கள். இந்தத் தானம் என்பது பண்டைத் தமிழிலக்கியத்தில் இல்லை; ஆனால் தானம் பாடினான் என்பதிலுள்ள தானம் வடசொல்லல்ல. என்னடா வேலையைப் பார்க்காமல் தந்தனத் தான் பாட்டுப்பாடுகின்றாய் என்று ஒருவனைக் கேட்கின்றான். இந்தத் தந்தனத்தான் என்பது பண்டைத் தமிழில் இல்லை. ஆதலால் இது தமிழல்ல என்று சொல்கின்றவன் படித்தவனா என்று நோக்குக.

எனவே தானம் பாடுதல் என்பதிலுள்ள தானம் என்பது செந்தமிழ்ச் செல்வமே என்க.

### சிரத்தையா சீர்த்தையா?

சிரத்தை என்பது பிறவியிலேயே ஆரியம் அன்று. அது சீர்த்தை என்பதைத் திருடி மாற்றியமைத்தது.

சீர் என்ற தமிழ்ச் சொல்லுக்குச் சிறப்பு என்பது பொருள். சீர் என்பதன் அடியாகச் சீர்த்தை தோன்றியது. சீர்த்து, குறிப்பு வினையால ணையும் பெயர். ஈற்று ஐ காரம் சாரியை, சீர்த்தை என்றால் பொருள் என்ன பொதுவன்றிச் சிறப்பாக ஒன்றில் மனம் செலுத்துதல் என்பது.

உலகம் தோன்றிய நாளில் தோன்றியதும், தமிழகத்தில் வழங்குவதுமான தமிழ்ச்சொல் தமிழாகத்தான் நமக்குக் காட்சியளிக்க வேண்டும். கெட்ட காலத்தால், திருட்டுப் பசங்கள் சேர்க்கையால்,

காட்டிக் கொடுக்கும் கயவர் ஒத்தூதலால் தமிழர் கண்ணுக்கும் எல்லாம் வடமொழியாகத் தோன்றுகின்றன. யாரை நோவது!

சிரத்தை வடசொல்லன்று, செந்தமிழ்ச் செல்வந்தான்.

## கவளம்

இது வடசொல் அன்று. கவுள் என்பதன் அடியாகப் பிறந்த தூய தமிழ்க் காரணப் பெயர்.

கவளம் - ஒருவாய் உணவு. கவுள் - கவ்வி வாங்கப் பெற்ற இடத்தை நிறைத்த உணவு, இரண்டிற்கும் உள்ள கருத்தொற்றுமை காண்க.

கவளத்திற்கும், கவுளுக்கும் கவ் என்பதே வேர்ச்சொல் என உணர்தல் வேண்டும்.

கவ் - அளம், கவ் - உள்.

எனவே கவளம் தூய தமிழ்க் காரணப் பெயர் என்று கடைப்பிடிக்க.

## செந்தூரம்

இது வடசொற் சிதைவென்று ஏமாற்றுவாரும் உளர்.

செம்மை - சிவப்பு. செம்மை - ஈறுபோகவே செம் என நிற்க. அதன்பின் தூரம் வந்தது. தூரம் - நிறைவு. செம்மை நிறைந்தது செந்தூரம்.

எனவே செந்தூரம் தூய தமிழ்க் காரணப் பெயர்.

**- குயில், 20.9.1960**

## 85

### தரை

இது தராதலம் என்பதில் வரும் தரா என்ற வடசொற் சிதைவே என்று கூறித் திரிவர் வடமொழிச் சார்பினர். இவ்வாறு கூறுவோர் தூங்குகின்றான் துடையில் கயிறு திரிக்க எண்ணுகின்றவர்களே.

தருதல் என்பதன் அடியாகிய தரு என்பதும், ஐ என்ற தொழில் இறுதி நிலையும் 'முற்றும் அற்று ஒரோ வழி' என்ற இலக்கணச் சட்டத்தால் தரை என்று ஆனது. ஆகு பெயராக எவையும் தருவதோர் நிலத்திற்கு ஆனது.

கம்பராமாயணம் முதலிய தமிழ் நூற்களில் வந்துள்ள தறை என்ற சொல்லுக்கு வன்னிலம் என்பது பொருள்.

தரை என்ற தூய தமிழ்க் காரணப் பெயரை, சொற்பஞ்ச முடைய வந்தேறிகள் எடுத்தாண்டனர். அவர்கள் ஐயீற்றை ஆவாக வாய் வழக்கஞ் செய்வார்கள்.

எனவே தரை செந்தமிழ்ச் செல்வம்.

### மாயை

இதை மாயா என்ற வடசொல்லின் சிதைவென்பர் மேற்படியார்

மாய்தல் என்ற தொழிற்பெயரில் தல் தொழில் இறுதிநிலை மாயையில் ஐ இறுதி நிலை. மாய்தல் என்பதே இதன் பொருள். எவற்றின் மாய்தலையும் தன்னிடம் கொள்வது என்று பொருள் கொள்க.

மாயை என்பதையே மாயா என்றனர். மேலே கூறியபடி மறைமலை யடிகளாரும் மாயை தமிழ்ச் சொல் என்றமை இங்கு நினைவுகொள்க

எனவே மாயை வந்தவர் மொழியன்று; செந்தமிழ்ச் செல்வமே.

**- *குயில்*, 4.10.1960**

# 86

## கல்லூரி:

கலாசாலை என்பது வடமொழித்தொடர். அதைத்தான் தமிழர்கள் கல்லூரி என்று சொல்லித் திரிகிறார்கள் என்று என் பார்ப்பன நண்பர்கள் சொல்லுகிறார்கள். எப்படி?

கலாசாலை என்பது கலப்பில்லாத வட சொற்றொடரா? என்பதும் ஆராய்ச்சிக்குரியது. அதுகிடக்க ...

கல்லூரி என்பது பற்றிப் பார்ப்பன நண்பர்கள் கருத்துரைத்தார்கள் எனில், அவர்கட்கும் தமிழுக்கும் என்ன தொடர்பிருக்கமுடியும் தமிழாராய்ச்சியேனும் அவர்கட்கு உண்டா? என்று நாம் கருதிப் பார்த்து, அவர் உரை கரடி என்று தள்ள வேண்டும்.

ஈண்டு நாம் எடுத்துக்காட்டும் செய்யுளை உற்று நோக்குக:

**கலத்தற் காலம் கல்லூரிநற் கொட்டிலா**
**முலைத்த டத்திடை மொய்யெருக் குப்பையா**
**இலக்கம் என்னுயி ராளய்து கற்குமால்**
**அலைக்கும் வெஞ்சரம் ஐந்துடை யானரோ.**

என்னும் சிந்தாமணிச் செய்யுளில் கல்லூரி பயிலும் இடம் என்று பொருள் தரல் கண்டு மகிழ்க.

- குயில், 8.6.1958

## தத்துவம்:

அடிகள் என்று பெரியோர்களையும் கடவுளரையும் சொல்லு கிறார்கள். ஒன்றும் விளங்கவேயில்லை. விளக்க வேண்டுகிறேன்?

தோழருக்கு மட்டுமா விளங்காமலிருக்கிறது! தமிழ்ப் புலமைமிக்க புலவர் பலர்க்கு விளங்கவில்லை என்று நினைக்க வேண்டியதாகிறது.

அடி தாள் என்பன ஒருபொருட் சொற்கள். அடி, தாள் என்றால் மக்கள் உறுப்பாகிய காலையே குறிப்பதாகக் கொள்ளக்கூடாது. வேறு பொருளும் உண்டு. அதுதான் "தத்துவம்" என்பது.

இனி, அடிகளே என்று பெரியோர்களைச் சொன்னால், தத்துவ உணர்வு உடையவரே என்று பொருள். அடிகளே என்று கடவுளைக் கூறினால் தத்துவனே என்று பொருள்.

அடிகள் என்னும் வழக்குத் திருவாரூர்க் கபிலர் தொகுத்த எண்ணூல் அதாவது சாங்கிய நூல் வழக்கு.

அனைத்தும் இருபத்தைந்து தத்துவத்துள் அடங்கின என்று சாங்கிய நூல் சாற்றுகின்றது. அதுவேயுமன்றி, அனைத்தும் இருபத்தைந்து தத்துவமாம் என்றுணர்ந்த நிலையே விடுதலை என்றும் அச் சாங்கிய நூல் உறுதி செய்கின்றது.

அடிகள் என்ற சொல் சமணசமயத்தாருடையது என்றும், சைவ சமயத்தாருடையது என்றும் கூறிக்கொள்வது பொருத்தமன்று.

திருக்குறளில் தாள் என்றும் அடி என்றும் வருமிடங்களில் இவ்வாறே பொருள் காண வேண்டும்.

திருக்குறள் மடத்துப் பதிப்பில் நற்றாள் என்பது சிவபெருமான் சீபாதம் என்று பொருள். சொல்லப்பட்டிருப்பது கலப்பற்ற பிழையேயாம்.

திருக்குறளில் அடி என்றும் தாள் என்றும் வந்துள்ளதால், திருவள்ளுவர் உருவ வணக்கத்தை ஒப்புகின்றார் என்று வேறு சிலர் எண்ணுகின்றார்கள். அதுவும் மேற்கூறியவாறு பிழையேயாம். ஏன் எனில்,

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு

என உருவ வணக்கத்தை மறுக்கும் வள்ளுவரே அதை ஏற்பாரா? ஏற்கமாட்டாரன்றோ?

இனித் தத்துவம் என்ற சொற்பற்றியும் சில கூறுவோம்.

தத்துவம் வடமொழியன்று. தன்மையின் அடியாகிய தன் துவம் பெற்று வடமொழிச் செய்கைக்கு உட்பட்டது. துவம் நீக்கி தன்மை என்று சொன்னாலே தத்துவம் அடி தாள் என்று சொன்னதேயாகும் என

அறிதல் வேண்டும். தத்துவம் என்ற சொல்லுக்கு நாம் கொள்ளும் பொருளை வடசொல் கொள்ளவில்லை என்பது ஆராயற்பாலது.

**- குயில், 17.6.1960**

## சிக்கி—முக்கி:

சிக்கி - முக்கி இரும்புத் துண்டில் மோதித் தீ உண்டாக்கும் ஒருவகைக் கல்லின் பெயர். இந்தப் பெயர் அக்கல் மோதுகையில் சிக்கு முக்கு என்ற ஒலி உண்டாவதால் வந்தது என்பர். இது தூய தமிழ்ச் சொல்! ஆனால் கலைமகளுக்கு இது தமிழ்ச்சொல் என்று சொல்ல மனம் ஒப்பவில்லை. சக் மக் என்ற உருதுச்சொல் இது என்கின்றது! சிக்கி முக்கி என்றதை உருதுகாரர் சக் மக் என்றனர் என்றால் வரும் இழுக்கென்ன?

**- குயில், 9.9.1958**

## கொத்துதல்:

கொத்துதல் என்பது தான் குத்துதல் என்று திரிந்தது என்று கலைமகள் சொல்வது பிழை. கொத்துதல் வேறு குத்துதல் வேறு. கொந்துதல் என்பதின் வலித்தலே கொத்துதல் என்க.

**- குயில், 9.9.1958**

## சடை:

ஜாப் என்னும் கிறித்துவ ஆகமத்தில் இறைவனுக்கு உரிய இயற்பெயராக முப்பத்தொரு முறை காணப்படுகின்றது. சடை என்னும் பெயர். இன்னும் கிறித்துவ சமயத்துக்குரிய முதலாகமத்தில் இறைவன் ஆபிரகாமுக்கு எதிரே தோன்றி அருள் செய்தபோது தன்பெயர் எல்சடை என மொழிந்தான் என்பது சொல்லப்பட்டிருக்கின்றது. சிவனைச் சடையன் என்று தமிழிற் சொல்லியதை அப்படியே 'கபர்திந்' என்று மொழிபெயர்த்து அச்சொல் இருக்கு வேதத்தில் பல்காலும் சொல்லப்பட்டிருக்கின்றது. இது நாலாயிரத்து நூறு ஆண்டுகட்கு முன்னரே இயற்றப்பெற்றது. அதன் பிற்காலத்தில் வடவர், சடையை ஜடா என்றே சொல்லத் தொடங்கினர்.

உலகாண்டது தமிழ் என்பதற்கு இதுவும் ஒரு சான்று. மறைமலையடிகள் மாணிக்கவாசகர் "வரலாறும் காலமும்" என்னும் நூலின் 703–ஆம் பக்கம் காண்க.

**- குயில், 30.8.1960**

## காரீயம் – எழுதுகோல்:

தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே காரீயத்தை எழுதுகோலாக எடுத்தாண்டனர். அதை வாணிகத்தின் நிமித்தம் தமிழகம் வந்த அராபியர் மேற்கொண்டனர். அவர்களால் தெரிந்து கொண்டனர் பிரன்சுக்காரர். இன்றும் காரீயம் என்ற அது கிரியம் என்று தமிழகத்தில் வழங்குவதுண்டு. இதைப் பிரான்சுக்காரர் கிரையம் என்பர். ஆங்கிலத்தில் இதற்குப் பென்சில் என்று பெயர்.

**- குயில், 29.7.1959**

## மேசை:

மேசை தமிழ்ச் சொல்லா?

மேசை என்பது இத்தாலி மொழி என்று சிலர் கூறுகிறார்கள். நமக்கு அது உடன்பாடில்லை.

உதட்டின் மீது அமைந்திருப்பதனால் மீதை அல்லது மீசை என்ற பெயர் உண்டாயிற்று. அது போலவே மீது என்ற சொல் மேது என்று ஆகும். மேது மேசை ஆதலுக்கும் வழி உண்டு. உயர்ந்திருக்கும் பெட்டிக்குத் தமிழில் மேசை என்ற பெயர் உண்டானதில் தவறு ஒன்றும் இல்லை. தமிழ் நாட்டில் வழங்கும் தமிழ்ப்பெயரைத் தமிழ் இலக்கண வகையில் ஆராய வேண்டியது முதல்வேலை.

மேசை என்பது பற்றி ஆராய இத்தாலிக்குப் போவது வீண் வேலை.

## கவிதை:

கவிதை தமிழ்ச் சொல்லா?

கவி முதனிலை. த் எழுத்துப் பேறு. ஐ தொழிற் பெயர் இறுதி நிலை. கவிகை என்பது போல. கவிகை ஓர் இடத்தை நோக்கிக் கவிந்திருப்பது. குடையைக் குறித்தது. கவிதை என்பது மனம் ஒரு பொருள் நோக்கி கவிவது அல்லது சூழ்வது. ஆராய்வது என்பனவும் பொருளாகக் கொள்க. எனவே கவிதை தூய தமிழ்ச் சொல்.

கவிஞர் என்பதில் கவி முதனிலை. அர் பலர் பால் இறுதிநிலை. ஞ் பெயர் இடைநிலை. இதை வடவர் கவிக்ஞர் என்பர். க் என்ற எழுத்தை அவர் உடன் சேர்த்ததால் அது வடசொல்லாய் விடாது. மலைக்குத் திருநாமம் போட்டுவிட்டால் அது வைணவச் சொத்தாகிவிடுமா?

**- குயில், 15.4.1962**

■ ■ ■